நம்முடைய முதலமைச்சர் அவர்களின் காவல் துறை என்பது இன்று எந்தவொரு கட்டுப்பாடும் இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. அவர்களுக்கென்று ஏற்கெனவே, 2 தடவை Police Commission-ஐ நீங்கள் அமைத்திருக்கிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதேபோல இப்போதும் ஒரு Police Commission-ஐ ஏற்படுத்தி அவர்களுடைய குறைகளையெல்லாம் களைய வேண்டும்.

இரண்டாவது, இருக்கின்ற Police அதிகாரிகள் என்ன குறை சொல்கிறார்கள் என்று சொன்னால், 10 ஆண்டு காலம் ஆனால் ஒரு Promotion வருமென்கின்ற எண்ணம் எங்களுக்கு வராதவரை எப்படி நாங்கள் இந்தத் துறையில் நிம்மதியாக வேலை செய்ய முடியும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அது ஒரு நியாயமான கோரிக்கை. இந்த கோரிக்கைகளையெல்லாம் சிறப்பான முறையில் நிறைவேற்றி, காவல் துறை அதிகாரிகளுடைய மனக் குறையைப் போக்கி, அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மற்றும் அதன் தொடர்பான துறைகள் குறித்து இரண்டு நாட்களாக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட 19 பேர் உரையாற்றி, நான் என்னுடைய விளக்கத்தைக் கூறுகின்ற வாய்ப்பைப் பெற்று இந்த அவையில் சில கருத்துக்களை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதலில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தீயணைப்புத் துறைக்கு—காவல் துறைக்கு ஒரு Computer 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு.......

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** காவல் துறைக்குக் கணினி..

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** காவல் துறையிலே கணினி, அதுதான் Computer என்று சொன்னேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தீயணைப்புத் துறை அல்ல, காவல் துறை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஆமாம். காவல் துறைக்கு வாங்கப்பட்டிருப்பதாகச் சொல்லி,. இது அதிக விலை என்று குறிப்பிட்டார்கள். ஏனென்றால் தலைப்புச் செய்தியாக அதுதான் வரும்

என்ற காரணத்தால் அதைப் பற்றிய விளக்கத்தை முதலிலேயே கொடுத்துவிட நான் விரும்புகிறேன். 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டது பிரதான Computer மாத்திரம் அல்ல, Computer, அத்துடன் இணைந்த Printer, Modem-Network-தொடர்பு, பெரிய Computer Server-கள், UPS ஆகிய Computer உள்ளிட்ட இந்த 6 item-களும் சேர்ந்துதான் 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது. எனவே அது ஒன்றும் அதிக விலை அல்ல. Computer மாத்திரம் வாங்கியிருந்தால், கணினி மாத்திரம் வாங்கியிருந்தால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்தத் தொகைக்கு வாங்கி இருக்க முடியும். இவற்றோடு சேர்ந்து Printer, Modem, Net Work-தொடர்பு, பெரிய Computer Server-கள், UPS ஆகியவற்றையும் வாங்கியிருக்கின்ற காரணத்தால் இந்தத் தொகை அளிக்க வேண்டியதாயிற்று என்ற என்னுடைய விளக்கத்தைத் தர விரும்புகின்றேன்.

காவல் துறைக்கு அரசின் சார்பில் அளிக்கப்பட்டிருக்கின்ற மொத்த நிதியொதுக்கீடு எவ்வளவு என்று பார்த்தால் 1995-96-இல், கடந்த ஆட்சியில், 450 கோடியே 57 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1996-97-இல் அது 497 கோடியாக உயர்ந்து இப்போது 2000-2001 வரவு-செலவுத் திட்டத்தில் காவல் துறைக்கு மொத்த நிதியொதுக்கீடு 1116 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 4 ஆண்டுகளில் காவல் துறைக்கு அதிகமாக்கப்பட்ட நிதியொதுக்கீடு 663 கோடி ரூபாய் ஆகும்.

என்னுடைய அருமை நண்பர் திரு. பழனிசாமி அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும், ஆளுங்கட்சி சார்பிலே பேசியவர்களும், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தவர்களும், காவல் துறையினுடைய தவறான போக்குகள், தவறான காரியங்கள் இவற்றை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நம்முடைய நண்பர் பழனிசாமி அவர்கள் காவல் துறையினுடைய சிறந்த செயல்களுக்கான பாராட்டுகளையும் இங்கே தெரிவித்திருக்கின்றார். ஆகவே இந்தத் துறை முழுவதும் கண்டிக்கத்தக்க ஒன்று அல்ல என்பதும் அதிலே ஒரு சிலருடைய செயல்பாடுகள் கண்டிக்கத்தக்க அளவிற்கு இருக்கின்றன என்பதும் புலனாகின்ற உண்மையாகும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விடுதலைப் புலிகளைப் பற்றியும் மத நல்லிணக்கத்தைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பிறகு நான் என்னுடைய பேச்சின் இடையிலே மறந்துவிடக்கூடும். அமீர் அவர்களுடைய பெயரால் மத நல்லிணக்கப் பதக்கம் ஒன்று

வழங்க வேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். நிச்சயமாக அந்தப் பெருமகனுடைய பெயரால் அந்தப் பதக்கம் வழங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர் குறிப்பிட்ட விடுதலைப் புலிகள் பற்றிய அந்தப் பிரச்சினைகளை எல்லாம் என்னுடைய பேச்சின் இடையிலே குறிப்பிடலாம் என்று கருதுகின்றேன். கழக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சரியாகச் செயல்படுகிறது; சாதி மதக் கலவரங்கள் குறைந்திருக்கின்றன என்பதை இங்குள்ள உறுப்பினர்கள் மாத்திரம் அல்ல, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் தோழர் நல்லக்கண்ணு அவர்கள்கூட ஆனந்தவிகடன் ஏட்டிற்கு அளித்த பேட்டியில் சாதி, மதத் தகராறுகளை இந்த ஆட்சியிலே குறைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, அவருடைய கருத்துகள் சிலவற்றை அவர்கள் இணைத்திருந்தாலும்கூட பொதுவான ஒரு பாராட்டுதலை அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்காக நான் இங்கிருந்தவாறே அவருக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

சாதி, மதக் கலவரங்கள் 1996-ஆம் ஆண்டு தமிழகத்திலே 29 என்ற எண்ணிக்கை அளவிலேயிருந்து, 1997-ஆம் ஆண்டு 67 என்கின்ற எண்ணிக்கை அளவிற்கு உயர்ந்து, நாம் அனைத்துக் கட்சிக் கூட்டங்களை எல்லாம் கூட்டி, அதற்கு என்ன நிவாரணம் தேடலாம் என்றெல்லாம் யோசித்து, இரண்டு மூன்று முறை அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்துப் பல நடவடிக்கைகளை எடுத்த பிறகு 1998-ஆம் ஆண்டு 12 ஆகக் குறைந்து, 1999-ஆம் ஆண்டு 6 என்ற அளவிலே குறைந்து, இப்போது ஒரேயொரு கலவரம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) சிறிய அளவில் திருவண்ணாமலையிலே ஒரு பள்ளிக்கூடத்திலே மாணவர்களிடத்திலே, T.V. சம்பந்தமான பிரச்சினையிலே ஏற்பட்டது. ஒரு முஸ்லிம் மாணவருக்கும், முஸ்லிம் அல்லாத மாணவருக்கும் என்ற அளவோடு, ஒன்று என்ற அளவிற்குக் குறைந்திருக்கின்றது. இதிலே நாம் மகிழ்ச்சியடைந்துவிட முடியாது. இந்த ஒன்றும் இல்லாத அளவிற்கு--சாதி, மதக் கலவரங்கள் ஒன்றுமே இல்லாத அளவிற்கு நாம் பாடுபட்டாக வேண்டும். மேலும் ஒன்றோ, இரண்டோ கூடுவதற்குக்கூட இடம் தராமல் நாம் பாடுபட்டாக வேண்டும். அமைதியான முறையிலே பெரிய விழாக்கள் எல்லாம்கூட நடைபெற்றிருக்கின்றன. காவல் துறையினுடைய கடமையுணர்வின் காரணமாக, கட்டுப்பாடு காரணமாக கடந்த நான்கு ஆண்டுகளில்

தேவர் ஜெயந்தி விழா மற்றும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் போன்றவை எந்தவிதமான அசம்பாவிதங்களும் இல்லாமல் நடந்தேறியதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இந்த 4 ஆண்டுக் காலத்திலே நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள், இடைத் தேர்தல்கள்—1996-இல் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்கள் மற்றும் தமிழக சட்டமன்றத்தினுடைய இடைத் தேர்தல்கள், இவையெல்லாம் மிக அமைதியான முறையிலே நடைபெற்றிருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகளினுடைய விகிதாச்சாரத்தைப் பற்றி நான் அல்ல, தேசிய குற்றப் பதிவுப் பிரிவு (National Crime Records Bureau) 1999-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய 6 மாதங்களில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற குற்ற நிகழ்வுகள் குறித்து புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது. Mid Term Review. 1999 என்ற அந்த அறிக்கையிலுள்ள சில புள்ளிவிவரங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

கொலைகள்—இந்த 6 மாத காலத்தில் உத்தரப் பிரதேசத்திலே 4,668; பீகாரில் 2,716; மத்தியப் பிரதேசத்தில் 1,647; மராட்டியத்தில் 1,513; ஆந்திரப் பிரதேசத்தில் 1,367; தமிழ்நாட்டில் 907. இந்த 907 என்பது மிகக் குறைவு என்று நான் கூறமாட்டேன். இந்த 907 கூட நடைபெறாவண்ணம் நம்முடைய காவல் துறை இன்னும் கடமையாற்றிட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்து என்பதை நான் மிகத் தெளிவாக உணர்வேன்.

கற்பழிப்பு போன்ற காரியங்கள்—மத்தியப் பிரதேசத்திலே 1,868; உத்தரப் பிரதேசத்திலே 825; மராட்டியத்தில் 648; இராஜஸ்தானில் 609; பீகாரில் 596; ஆந்திரப் பிரதேசத்தில் 485; அசாமில் 327; மேற்கு வங்கத்தில் 412; கேரளாவில் 214; தமிழ்நாட்டில் 202;

கூட்டுக்கொள்ளைகள் (Dacoity)—பீகாரில் 1,190; உத்தரப் பிரதேசத்தில் 509; அசாமில் 448; மராட்டியத்தில் 269; மேற்கு வங்கத்தில் 202; கர்நாடகாவில் 151; குஜராத்தில் 147; ஆந்திரப் பிரதேசத்தில் 123; தமிழ்நாட்டில் 87;

வழிப்பறி—(Robbery)—உத்தரப் பிரதேசத்தில் 2,295; பீகாரில் 1,430; ஒரிசாவில் 557; கர்நாடகாவில் 551; ஆந்திரப் பிரதேசத்தில் 403; தமிழ்நாட்டில் 297; கன்னக்களவு (Burglary) —மத்தியப் பிரதேசத்தில் 8,962; மராட்டியத்தில் 7,339; உத்தரப் பிரதேசத்தில் 4,739; கர்நாடகாவில் 3,940; ஆந்திரப் பிரதேசத்தில் 3,396; தமிழ்நாட்டில் 2,745.

கலவரங்கள் (Riots)—இராஜஸ்தானில் 7,861; பீகாரில் 5,540; கர்நாடகாவில் 3,722; உத்தரப் பிரதேசத்தில் 3,494; கேரளாவில் 3,199; மேற்கு வங்காளத்தில் 2,258; தமிழ்நாட்டில் 1,939 என்ற அளவில் இந்த விகிதாச்சாரங்கள், குற்ற நிகழ்வுகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11-45

காவல் துறையினுடைய சிறப்பான பணி என்று எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், காவல் துறையினுடைய எண்ணிக்கை ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு எவ்வளவு பேர், மற்ற மாநிலங்களிலே எவ்வளவு பேர் என்ற கணக்கைப் பார்க்கின்றபொழுது, ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு, பஞ்சாபில் 297 காவலர்கள்; அஸ்ஸாமில் 193 காவலர்கள்; ஹரியானாவில் 162 காவலர்கள்; மராட்டியத்தில் 155 காவலர்கள்; குஜராத்தில் 138 காவலர்கள் என்ற விகிதத்திலே இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலேதான் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு நூற்றி இருபத்து நான்கே பேர்கள்தான் காவலர்கள் என்ற விகிதத்திலே, குறைவான எண்ணிக்கையில் உள்ளது. ஆனால் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்பொழுது, காவலர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும்கூட, செயல்பாடுகள் மற்ற மாநிலங்களை மிஞ்சக்கூடிய அளவில் இருக்கின்றன.

பதிவு செய்யப்பட்ட வழக்குகளில், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளினுடைய சதவீதம் என்று பார்த்தால், அகில இந்திய சராசரி, 1997-ல் 77 சதவீதம். தமிழ்நாட்டில் 91 சதவீதம். 1998 ஆம் ஆண்டு அகில இந்திய சராசரி 77 சதவீதம். தமிழ்நாட்டில் 90 சதவீதம்.

அதேபோல தொடரப்பட்ட வழக்குகளில், தண்டனையில் முடிவுற்ற வழக்குகளினுடைய சதவீதம் அகில இந்திய சராசரி 1997-ல் 38 சதவீதம். தமிழ்நாட்டில் 64 சதவீதம். 1998-ல் அகில இந்திய சராசரி 37 சதவீதம், தமிழ்நாட்டில் 64 சதவீதம். அதிலும் நாம் சிறப்பாகப் பணியாற்றினோம் என்பதைத்தான் அந்தப் புள்ளிவிவரம் நமக்கு இங்கே காட்டுகின்றது.

காவல் துறையில் மதம், ஜாதி இவையெல்லாம் தலைக் காட்டக்கூடாது என்ற ஒரு நல்ல தத்துவத்தை நம்முடைய அருமை நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக்கூறி, காவல் துறையிலே இஸ்லாமியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேயில்லை என்று கூறினார். அதிலும் குறிப்பாக இரகசியப் புலனாய்வுத் துறை போன்ற துறைகளிலிருந்து இஸ்லாமியர்கள்

நீக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று கூறினார். கடந்த ஆண்டு காவல் துறை மானியத்திலே பேசும்போதும் திரு. லத்தீப் அவர்கள் இதையேதான் கூறினார். இந்த ஆண்டும் அதையேதான் கூறியிருக்கின்றார்.

1989 ஆம் ஆண்டு நான் ஆட்சியிலே இருந்தபோதுதான், ஜாபர் அலி அவர்களைப் புலனாய்வுத் துறைப் பொறுப்பில் வைத்திருந்தேன். ஜாபர் அலி என்றாலே அவர் முஸ்லிம் என்று நமக்குத் தெரியும். ஜாபர் அலி செட்டியார் என்றோ, ஜாபர் அலி முதலியார் என்றோ யாரும் சொல்லமுடியாது. அவரைத்தான், புலனாய்வுக் துறைப் பொறுப்பிலே அமர்த்தி அவருக்கு மாநில அளவிலே அந்தப் பொறுப்பை நான் அளித்திருந்தேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றப்பட்ட பிறகு, வந்த ஆட்சியினர், அவரை என்ன பாடுபடுத்தினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அருமை நண்பர் லத்தீப் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அந்த வேதனையைத் தாங்கமாட்டாமல் தாமாகவே ஓய்வு பெற்றுக்கொண்டார் ஜாபர் அலி அவர்கள். புலனாய்வுத் துறையிலே தலைமைப் பொறுப்பில் ஜாபர் அலியை நான் நியமித்ததற்கு முன்பு, இஸ்லாமியர் யாருமே இருந்ததில்லை என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தற்போதுகூட, எனக்கு முதன்மைப் பாதுகாவலராக இருப்பவர், ஜாபர் சேட் I.P.S. அவர்கள்தான் என்பதை நான் லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காவல் துறையிலே ஒட்டுமொத்தமாக இஸ்லாமியர்கள் என்று பார்த்தால், S.P. நிலை அதிகாரிகள் 5 பேர்; கூடுதல் S.P. கடந்த ஆண்டு 3 பேர், இந்த ஆண்டு 6 பேர்; D.S.P. கடந்த ஆண்டு 16 பேர், இந்த ஆண்டு 17 பேர். Inspectors கடந்த ஆண்டு வரை 132 பேர், இந்த ஆண்டு 137 பேர். Sub-Inspectors கடந்த ஆண்டு வரையில் 231 பேர், இந்த ஆண்டு 271 பேர். தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள், கடந்த ஆண்டு வரையில் 4,617 பேர், இந்த ஆண்டு 4,648 பேர். ஒட்டுமொத்தமாக கடந்த ஆண்டு 4,604 இஸ்லாமியர்கள் இருந்ததற்கு மாறாக இந்த ஆண்டு 5,084 பேர் காவல் துறையிலே பணியாற்றுகின்றார்கள். காவல் துறையில் மொத்தப் பணியாளர்களுடைய எண்ணிக்கையில் இது 6.3 விழுக்காடு என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1 விழுக்காடு உண்டா என்று அன்றைக்கு அவர்கள் ஆணித்தரமாகக் கேட்டார்கள். 6.3 விழுக்காடு காவல் துறை மொத்தப் பணியாளர்களில் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-50*

இன்னும் சொல்லப்போனால், அரசின் முக்கிய துறையான பொதுத் துறையின் செயலாளரே பரூக்கி என்ற இஸ்லாமிய I.A.S. அதிகாரிதான். மாவட்ட ஆட்சித் தலைவர்களில் மூன்று பேர் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

இரகசியத் துறையிலே இஸ்லாமியர் இல்லை என்றும், இருந்தவர்கள் நீக்கப்பட்டு விட்டார்கள் என்றும் லத்தீப் அவர்கள் கூறினார்கள். குற்றப் புலனாய்வுத் துறை, ஒற்றாய்வுத் துறை, `Q' பிரிவு ஆகியவற்றில் இஸ்லாமியர்கள் S.P. நிலையில் ஒருவரும், D.S.P. நிலையில் ஒருவரும், 6 Inspector-களும், 7 Sub-Inspector-களும், 30 தலைமைக் காவலர் மற்றும் காவலர்களும் ஆக மொத்தம் 45 பேர் பணியாற்றுகின்றார்கள். அண்மைக்காலத்தில் 'Q' பிரிவிலிருந்து ஒரேயொரு Inspector-ரும், ஒரு தலைமைக் காவலரும்தான் மாற்றப்பட்டுள்ளார்கள். மற்றவர்கள் யாரும் மாற்றப்படவில்லை.

இன்னொன்று. இலட்சக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள் சிறையில் இருப்பதாகச் சொன்னார்கள். நான் அதைப்பற்றி வலியுறுத்திக் கேட்டபோது, இவையெல்லாம் ஒரு உயர்வு நவிற்சி என்று சொன்னார்கள். உயர்வு நவிற்சி என்பது இல்லாத பெருமையை அதிகமாகச் சொல்வது; இல்லாத எண்ணிக்கையை அதிகமாகச் சொல்வது, மிகைப்படுத்துதல். அவர் பன்மொழிப் புலவர். அவருக்கு நான் தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. மிகைப்படுத்தி, அன்றைக்கு, ஆயிரக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள், அப்பாவி இளைஞர்கள் சிறையில் இருப்பதாகச் சொன்னார்கள். அந்த எண்ணிக்கையை நீங்கள்தான் கொண்டு வரவேண்டுமென்று எனக்குச் சொன்னார்கள், நான் திருப்பிக் கேட்டபோது. கொண்டு வந்து இருக்கின்றேன். கட்டளையை ஏற்று. (சிரிப்பு)

தமிழகத்திலே உள்ள பத்து சிறைச்சாலைகளிலும் சேர்த்து 12-5-2000 அன்று சிறையிலே இருக்கின்ற மொத்தக் கைதிகளின் எண்ணிக்கை 13,138. 12 ஆம் தேதியோடு தமிழ்நாட்டு சிறையிலே, 10 சிறைக் கோட்டங்களிலே இருக்கின்றவர்களுடைய எண்ணிக்கை 13,138. இதில் இஸ்லாமியர்கள் 351 பேர்; இஸ்லாமியர்கள் அல்லாதவர்கள் 12,787 பேர்.

இஸ்லாமியர்கள் 2.67 சதவிகிதம்; அல்லாதவர்கள் 97.33 சதவிகிதம் என்ற இந்த விவரத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விரைவான புலன் விசாரணை நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு அன்று பேசிய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரால் எடுத்து வைக்கப்பட்டது. நம்முடைய சுந்தரம் அவர்களும் அதே கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நத்தை வேகத்திலே காவல் துறை நடைபெறுவதாக அன்றைக்கு அவர்கள் கூறினார்கள். எந்த அளவுக்குத் தீவிரமாக, விரைவாக புலன் விசாரணை நடைபெற்று, குற்றப் பத்திரிகைகள் எல்லாம் கொடுக்கப்பட்டு, விசாரணையும் முடிவுற்று, தண்டனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதற்குச் சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய தலையாய கடமையாகும்.

கோயம்புத்தூரில் நடந்த வெடிகுண்டுச் சம்பவங்களை விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு தீவிரமாக விசாரணை செய்து, 175 குற்றவாளிகளைக் கைது செய்தது. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் விசாரணை முடிக்கப்பட்டு 5-5-1999 அன்று 180 பேருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சென்னையிலிருந்து திருச்சி, ஈரோடு, திருச்சூர் சென்ற ரயில்களில் 6-12-1997 அன்று குண்டு வெடித்து, 10 பேர் இறந்த சம்பவத்தைப் புலனாய்வு செய்த சிறப்புப் புலனாய்வுக் குழு, குற்றவாளிகள் ஒன்பது பேரை விரைந்து கைது செய்தது.

சென்னை, கோவை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் 30-5-1999 அன்று குண்டு வைத்த குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். சென்னை இந்து முன்னணி அலுவலகத்தை வெடி வைத்துத் தகர்த்த வழக்கு, திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் வீட்டின்மீது குண்டு வீசப்பட்ட வழக்கு, சென்னையில் மூன்று ஓட்டல்களில் குண்டு வெடிக்கப்பட்ட வழக்குகள்—முந்தைய ஆட்சிக்காலத்தின்போது நிகழ்ந்து—நீண்டகாலமாக நிலுவையிலிருந்தன. அந்த வழக்குகள், கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் விரைந்து புலன் விசாரணை செய்யப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

தருமபுரியிலே கோவை விவசாயக் கல்லூரி மாணவிகள் சென்ற பேருந்து ஒன்று எரிக்கப்பட்டு, அதிலிருந்த 3 விவசாயக் கல்லூரி மாணவிகள் எரித்துக் கொல்லப்பட்டார்கள். நாட்டையே அதிர்ச்சி அடையச் செய்த அந்த வன்முறை கொலைச் சம்பவம் குறித்த வழக்கில் குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்புப் புலனாய்வுக் குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். 28-4-2000 அன்று, குற்றம் நடைபெற்ற மூன்று மாதத்திற்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 3 முக்கியக் குற்றவாளிகள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறையிலடைக்கப்பட்டார்கள். இன்னும் முக்கியமான வழக்குகள் என்று எடுத்துக்கொண்டால் பரபரப்பான பல வழக்குகள் விரைந்து முடிவு செய்யப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11-55

போலிச் சாமியார் பிரேமானந்தா வழக்கில், பிரேமானந்தாவுக்கு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமாக ரூபாய் 66 இலட்சத்து 40 ஆயிரமும் விதிக்கப்பட்டது. இதர நான்கு குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் மற்றும் பெண் குற்றவாளியான டாக்டர் சந்திராதேவிக்கு 2 ஆண்டு 7 மாதம் 2 நாட்கள் சிறைத் தண்டனையும், அபராதமாக ரூபாய் 25 ஆயிரமும் விதிக்கப்பட்டது.

சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி முதலாமாண்டு மாணவர் பொன். நாவரசு கொலை வழக்கில், ragging காரணமாக அக்கொலையைச் செய்த ஜான் டேவிட் என்ற குற்றவாளிக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பொள்ளாச்சியில் ஜிகாத் Committee தலைவர் திரு. பழனிபாபா கொலை செய்யப்பட்ட வழக்கில் 10-11-1999 அன்று ஐந்து குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் மேலும் 5 வருடக் கடுங்காவல் தண்டனையும் அளிக்கப்பட்டது.

சிதம்பரம் ம.தி.மு.க பிரமுகர் பழனிவேலு கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட 17 குற்றவாளிகள், கைதாகாமல் இருக்க எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளையும் முறியடித்து காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து, குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்துள்ளார்கள்.

தேவகோட்டை தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் ரூசோ கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட காளிமுத்து, சொர்ணலிங்கம்

மற்றும் 11 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு விசாரணை முடிந்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

மதுரை கல்லூரிப் பேராசிரியர் பரமசிவம் கொலை செய்யப் பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட இப்ராஹிம், நூர்தீன், ஷாகுல் ஹமீது, இப்ராஹிம் ஷா மற்றும் பழனி ஆகிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். இவர்கள்மீதும், நீதிமன்றத்தில் சரண் அடைந்த பக்ருதின் என்பவர்மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன் இவர்களில் 4 குற்றவாளிகளின்மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

மதுரையில் உதவி ஜெயிலர் ஜெயப்பிரகாஷ் கொலை செய்யப்பட்ட வழக்கில் அபுதாகிர், ஆசிக், அஸ்லாம் மற்றும் ஜாப்ரு என்ற சையது ஜபார் அகமது ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், கள்ந்தூரைச் சேர்ந்த மந்திரவாதி வேலுசாமி தனது தாயார், மாமனார் மற்றும் தனது உதவியாளர் ஆகிய மூன்று பேரைக் கொன்ற வழக்கில், புலன் விசாரணை C.B.-C.I.D-க்கு மாற்றப்பட்டுள்ளது. வேலுசாமி உள்ளிட்ட மூவர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். 25-2-2000 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாகர்கோவிலைச் சேர்ந்த செல்வி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் சிவகுமார், வாத்தியார் முருகன் என்கிற தியாகராஜன் மற்றும் நாகராஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வழக்கில் விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில் மூன்று வனப் பாதுகாவலர்கள் எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில், மூன்று வனப் பாதுகாவலர்களும் பசவன் என்பவனின் கும்பலினால் கொலை செய்யப்பட்டு, அவர்களது உடல்கள் எரிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்கள். வழக்கு நடைபெற்று வருகிறது.

மார்த்தாண்டத்தில் ஆசிரமம் நடத்திவந்த ஜான் ஜோசப் என்ற போலிச் சாமியார்மீது கற்பழிப்பு, பயமுறுத்தல், கொலை ஆகிய குற்றச் செயல்கள் புரிந்ததாகப் புகார்கள் வந்தன. தீவிர புலன் விசாரணைக்குப் பிறகு, போலிச் சாமியாரும் மேலும் 4 பேரும் கைது செய்யப்பட்டார்கள்.

தூத்துக்குடி காயல்பட்டினம் பேட்மா நகரில் மஜீத் என்பவர் நரபலி தரப்பட்ட வழக்கில் இரண்டு எதிரிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்கள். இவ்வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Eve-teasing காரணமாக பலத்த காயமடைந்து சரிகா ஷா என்ற கல்லூரி மாணவி இறந்துவிட்டார். இதற்குக் காரணமான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருச்சியில் டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட 13 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட R.S.S. அமைப்பாளர் குப்புராம் தாக்கப்பட்ட வழக்கில் இரு குற்றவாளிகளையும் காவல் துறையினர் கைது செய்துள்ளார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருச்சியில் லீலாவதி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலைக்குக் காரணமான ஸ்ரீபுத்ரா, தினகரன், ஸ்ரீஜெயந்தி, மாதாஜி, பெரிய சத்தியநாராயணன், சின்ன சத்தியநாராயணன் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த 7 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

சென்னையில் கிறித்துவக் கல்லூரியில் விண்ணப்பம் வாங்கச் சென்ற ராஜேஸ்வரி என்ற இளம்பெண் கல்லூரி வளாகத்தில் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். காவல் துறையின் தீவிரமான புலன் விசாரணையின் மூலம் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். 4 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்தது போன்ற போலியான ஜாமீன் உத்தரவுகளைத் தயார் செய்து, அவற்றைப் பயன்படுத்தி, நெல்லை,

தூத்துக்குடி, குமரி மாவட்டங்களைச் சேர்ந்த 48 கைதிகளை ஜாமீனில் விடுவித்துவிட்டார்கள். இந்த வழக்கில் குற்றவாளிகளான தூத்துக்குடியைச் சேர்ந்த குருமூர்த்தி, உடன்குடியைச் சேர்ந்த பொன் ஆதித்தன், சேரன்மகாதேவியைச் சேர்ந்த பாவநாசம் மற்றும் நாகர்கோவிலைச் சேர்ந்த பொன்ராஜ் ஆகியோரை ஆதாரங்களோடு கைது செய்து, போலியான ஜாமீன் உத்தரவுகள் தயார் செய்வது ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நண்பகல் 12-00

பெரம்பலூர் மாவட்டத்தில் 1999 ஆம் ஆண்டில் 6 மாத காலத்தில் நடந்த வெவ்வேறு சம்பவங்களில், ஒதுக்குப்புறமாக இருந்த வீடுகளில் வசித்த 21 பெண்கள் ஒரே முறையில் கொலை செய்யப்பட்டார்கள். போலீசாரின் தீவிரமான புலன் விசாரணைக்குப் பிறகு இக்கொலைகளைச் செய்த மருதமுத்து என்பவர் கைது செய்யப்பட்டு குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைக்கப்பட்டார்.

கன்னியாகுமரி, தெரிசனம்கோப்பு என்ற இடத்தில் ஒரு தனியார் வங்கியின் (GSC) பாதுகாப்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு ரூ.60 இலட்சம் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த வழக்கில் அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டார்கள். கொள்ளையடிக்கப்பட்ட அனைத்து நகைகளும் திரும்பக் கைப்பற்றப்பட்டன.

மதுரை மாநகராட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திருமதி லீலாவதி கொலை வழக்கில் ஆளுங்கட்சிக்காரர்கள் மீதே குற்றஞ்சாட்டப்பட்டது, என்றாலும் அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள், அதுமாத்திரமல்ல. வழக்கு முடியும்வரை அவர்கள் ஜாமீனில்கூட வரமுடியாமல், குற்றவாளிகள் ஆறு பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கோவையில் பச்சிலை ராமன் என்பவர் ஜக்கம்மா பூஜை என்ற பெயரில் சுமார் 20 அப்பாவிப் பெண்களைக் கடத்திச் சென்று உடலுறவு வைத்து பின்னர் திருப்பி அனுப்பியிருக்கிறார். 8-2-2000 அன்று இவர் கைது செய்யப்பட்டு ஓராண்டு தடுப்புக் காவல் சட்டத்திலே வைக்கப்பட்டுள்ளார்.

சேலம் மாவட்டத்தில் சுப்பிரமணி என்பவர் சாமியாடி வாக்கு சொல்லுவதாகக் கூறி பல நாட்களாக ஏமாற்றி வந்திருக்கிறார். இறுதியாக வள்ளி அம்மாள் என்பவரைக் கற்பழித்ததாகப் புகார் வந்ததையொட்டி வழக்குப் பதிவு செய்யப்பட்டு இவரும் கைது செய்யப்பட்டார்.

இவ்வளவு ஏன், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களுடைய மகனுடைய இல்லத்திலேகூட 12 ஆம் தேதி திருட்டு, 13 ஆம் தேதி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மகன் வீட்டில் திருடியதை 24 மணி நேரத்தில் பிடித்துவிட்டார்கள். அதனால் எனக்கு என்ன தொல்லை என்றால், திருட்டுக்கு உள்ளானவர்கள் எல்லாம் நீங்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால் வந்துவிட்டது, அதேபோல் எங்களுக்கும் வாங்கிக் கொடுங்கள் என்று ஏகப்பட்ட phone calls வருகிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** எப்படியோ செய்தி, விளம்பரமானால் சரி. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், பலமாடிக் குடியிருப்புகளில் திருடுவதில் கைதேர்ந்த கவுஸ் பாஷா, அவருடைய மகன் அக்பர் பாஷா மற்றும் மருமகன் நாசர் ஆகியோர் சென்னை நகரக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்கள். 18 வழக்குகளில் தொடர்புள்ள இவர்களிடம் இருந்து ரூ.5.2 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. இவர்கள் குண்டர்கள் தடுப்புச்சட்டத்தின் கீழ் சிறையிலே அடைக்கப்பட்டார்கள்.

தாம்பரத்தை அடுத்த பொழிச்சலூரைச் சேர்ந்த, 1990 முதல் திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டு வந்து 105 வழக்குகளில் குற்றவாளியான இரத்தின பாண்டியன் என்பவர் 13-9-1999 அன்று கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 87 தொலைக்காட்சிப் பெட்டிகள், 131 சவரன் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன. 4-11-1999 அன்று இவர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் அடைக்கப்பட்டார்.

தென் சென்னைப் பகுதிகளில் திருட்டுகள் புரிந்து வந்த கல்கத்தாவைச் சேர்ந்த கொடூரமான குற்றவாளி பர்வீஸ் அலி என்பவர் 2-7-1999

அன்று கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரூ.3 இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் மீட்கப்பட்டன. இக்குற்றவாளி, குண்டர்கள் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

சென்னை பூக்கடைப் பகுதிகளிலே உள்ள வியாபாரிகளிடமிருந்து பெரிய அளவில் பணத்தைக் கொள்ளை அடித்து, 10 கிலோ எடையுள்ள தங்க நகைகள் மற்றும் சுமார் 25 இலட்சம் ரூபாய் பணத்தைக் கொள்ளையடித்த குற்றவாளிகளான மன்னீர்பேட்டையைச் சார்ந்த அனில்குமார் மற்றும் அவரது கூட்டாளிகள் 20-7-1999 அன்று கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

பல்வேறு கொள்ளைகள் மற்றும் பணத்திற்காக ஆட்களைக் கடத்துதல் போன்ற குற்றங்களைச் செய்து வந்த முகேஷ் மற்றும் அவனது கூட்டாளிகள் அனைவரும் 29-12-1999 அன்று கைது செய்யப்பட்டார்கள். அவர்களிடமிருந்து மூன்று கைத்துப்பாக்கிகள், 37 குண்டுகள், அம்பாசிடர் கார், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ரூ.4 இலட்சம் கைப்பற்றப்பட்டன.

வருமான வரி அதிகாரிகளைப் போலவும், சுங்க இலாகா அதிகாரிகளைப் போலவும் மேலும் Police C.I.D. அதிகாரிகள் போலவும் போலியான வேஷத்தோடு மக்களை ஏமாற்றியும் மிரட்டியும் கொள்ளைகள் நடத்திய சதீஷ் மற்றும் அவனது கூட்டாளிகள் கைது செய்யப்பட்டார்கள். 11-3-1999 அன்று குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஏமாற்று, கொள்ளை அடித்தல், வஞ்சித்து திருடுதல் போன்ற காரியங்கள் மாத்திரமல்ல, ரவுடிகள் ராஜ்யத்தைக்கூட இந்த 4 ஆண்டுகாலத்திலே நம்முடைய காவல் துறையினர் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தி, தகர்த்தெறிந்திருக்கிறார்கள்.

சென்னையிலே மோகன் என்ற கபிலன், ஆசைத்தம்பி, மனோ, கோபால் ஆகிய ரவுடிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். திருநெல்வேலியில் முத்துராஜ் என்ற ரவுடி; கன்னியாகுமரியில் நாவல்காடு ஆர்னால்டு என்ற ரவுடி; தஞ்சாவூரில் கண்ணன் என்ற ரவுடி; தூத்துக்குடியில் பால் என்ற ரவுடி; சில நாட்களுக்கு முன்பு திருச்சியிலே பிச்சைமுத்து என்ற ரவுடி; சில மாதங்களுக்கு முன்பு திருச்சியிலே கோசிஜின்—இப்படி பிரபல ரவுடிகள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கின்றார்கள்.

மார்த்தாண்டத்தில் ஆசிரமம் நடத்திவந்த ஜான் ஜோசப் என்ற போலிச் சாமியார்மீது கற்பழிப்பு, பயமுறுத்தல், கொலை ஆகிய குற்றச் செயல்கள் புரிந்ததாகப் புகார்கள் வந்தன. தீவிர புலன் விசாரணைக்குப் பிறகு, போலிச் சாமியாரும் மேலும் 4 பேரும் கைது செய்யப்பட்டார்கள்.

தூத்துக்குடி காயல்பட்டினம் பேட்மா நகரில் மஜீத் என்பவர் நரபலி தரப்பட்ட வழக்கில் இரண்டு எதிரிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்கள். இவ்வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Eve-teasing காரணமாக பலத்த காயமடைந்து சரிகா ஷா என்ற கல்லூரி மாணவி இறந்துவிட்டார். இதற்குக் காரணமான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருச்சியில் டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட 13 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட R.S.S. அமைப்பாளர் குப்புராம் தாக்கப்பட்ட வழக்கில் இரு குற்றவாளிகளையும் காவல் துறையினர் கைது செய்துள்ளார்கள். குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருச்சியில் லீலாவதி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலைக்குக் காரணமான ஸ்ரீபுத்ரா, தினகரன், ஸ்ரீஜெயந்தி, மாதாஜி, பெரிய சத்தியநாராயணன், சின்ன சத்தியநாராயணன் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த 7 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

சென்னையில் கிறித்துவக் கல்லூரியில் விண்ணப்பம் வாங்கச் சென்ற ராஜேஸ்வரி என்ற இளம்பெண் கல்லூரி வளாகத்தில் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். காவல் துறையின் தீவிரமான புலன் விசாரணையின் மூலம் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். 4 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்தது போன்ற போலியான ஜாமீன் உத்தரவுகளைத் தயார் செய்து, அவற்றைப் பயன்படுத்தி, நெல்லை,

பல குண்டு வெடிப்புச் சம்பவங்களில் சம்பந்தப்பட்ட ஏர்வாடி காசிம் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்.

ரவுடிகள் மீண்டும் தொடர்ந்து தலையெடுக்காமல் இருக்கத் தேவையான கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. அதற்குப் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு நிரம்பத் தேவை என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருட்டு வீடியோ. சினிமா படம் எடுப்பவர்களை பெரும் நஷ்டத்திற்கு ஆளாக்கும் வகையிலே நடைபெறுகின்ற ஒரு காரியம் திருட்டு வீடியோ என்பது. ஒரு படம் தயாரிக்கப்பட்டு, அது வெளியிடப்பட்ட முதல் நாளோ அல்லது வெளியிடப்படுவதற்கு முதல் நாளோ இந்த திருட்டு வீடியோக்கள் நாட்டிலே பரவி, படத்தினுடைய வசூலைக் கெடுப்பதாக படத் தயாரிப்பாளர்கள், திரைப்படக் கலைஞர்கள், பலமுறை என்னிடத்திலே முறையிட்டு இருக்கின்றார்கள். கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அளித்த உறுதியின் காரணமாக 2000 ஆண்டு ஜனவரி முதல் இதுவரை திருட்டு வீடியோ தொடர்பாக 99 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 108 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்கள். 2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

1999 ஆம் ஆண்டில் திருட்டு வீடியோ தடுப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு 123 வழக்குகளைப் பதிவு செய்தது. அதில் 10 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 68 வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். 6 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திருட்டு வீடியோக்கள் கைப்பற்றப்பட்டன.

சென்னை மாநகரில் கடந்த ஆண்டு மட்டும் திருட்டு வீடியோ தொடர்பாக மொத்தம் 80 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 7 பேர்மீது குண்டர்கள் தடுப்புச் சட்டப்படி வழக்குப் போடப்பட்டு மூன்று மாதங்கள் சிறையிலே இருந்த பிறகுதான் உயர் நீதிமன்றத்தின் ஆய்வுக் குழு ஆணைப்படி சிறையிலிருந்து வெளியே வந்துள்ளார்கள். மேலும் 36 பேர்மீது வழக்குத் தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது.

5,840 வி.சி.டி.-க்களும், 14,205 வீடியோ கேசட்டுகளும் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டில் மாத்திரம் சென்னை மாநகரில் 24 வழக்குகள் போடப்பட்டு 26 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 5,455 வி.சி.டி.-க்களும், 115 வீடியோ கேசட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. 12-5-2000 அன்று மாலை நடைபெற்ற சோதனையிலே மாத்திரம் 1,180 வி.சி.டி.-க்கள் கைப்பற்றப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகரிலே உள்ள சில வீடியோ கடைகளில் திடீர் சோதனை செய்ததில் 79 வி.சி.டி.-க்கள் கைப்பற்றப்பட்டு மேலும் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்ற விவரத்தையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-10

காவல் நிலைய மரணங்களைப்பற்றி நம்முடைய ஞானசேகரன் அவர்கள் பேசினார்கள். காவல் நிலையத்திற்குச் சென்றாலே மரணம்தானா என்று ஆத்திரத்தோடு கேட்டார்கள். காவல் நிலைய மரணங்களை இந்த அரசு வரவேற்கவில்லை. மாறாக தன்னுடைய கவலையை அதற்காகத் தெரிவித்துக்கொள்கிற அரசுதான் இந்த அரசு என்பதையும் அதற்குக் காரணமாக இருக்கின்ற காவல் துறை அதிகாரிகளைக் கடுமையாகத் தண்டிக்கின்ற அரசு இந்த அரசு என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற அளவுக்கு, சமீப காலமாக, காவல் நிலைய மரணங்கள் இப்போது நிகழவில்லை. உறுப்பினர்களுக்குத் தரப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலும் அது விளக்கப்பட்டிருக்கிறது. 1996 ஆம் ஆண்டு காவல் நிலையங்களிலே நடந்த மரணங்கள் 13; 1997-ல் 16; 1998-ல் 8; 1999-ல் 8. இந்த மரணங்களும் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய முக்கியமான நோக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தவறு செய்த அதிகாரிகள்மீது இந்த அரசு எடுத்த நடவடிக்கை, இந்த 4 ஆண்டுகளில் மட்டும், 1 Inspector, 2 Sub-Inspectors, 9 காவலர்கள் இந்தக் காவல் நிலைய மரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 4 D.S.P-க்கள், 16 Inspectors, 20 Sub-Inspectors, 75 காவலர்கள்மீது குற்றவியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் செல்லக்குமார் பேசும்போது ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு தமிழகத்திலே நடைபெற்றதைக் குறித்தும், அது தடுக்கப்பட்டதைக் குறித்தும், தடுக்கப்பட்ட நேரத்திலேகூட அவர்கள், அந்த மாநாட்டுப் பிரச்சாரம் செய்தார்கள் என்பது குறித்தும் இங்கே கருத்துத் தெரிவித்தார். ஈழத் தமிழர் ஆதரவு மாநாட்டை இந்த அரசு ஆதரிக்கவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான், நிச்சயமாக அதை எதிர்க்கிறது என்பதற்குச் சான்றாகத்தான், சிதம்பரத்தில் நடைபெற்ற அந்த மாநாடு தடுக்கப்பட்டது. அந்த மாநாட்டிலே கலந்துகொள்வதற்கு வந்தவர்களெல்லாம்—சுமார் 200-க்கும் மேற்பட்டவர்கள்--கைது செய்யப்பட்டார்கள். ஆனால் டாக்டர் செல்லக்குமார் பேசும்போது ஒன்று கேட்டார். திருவாரூரில் இந்த மாநாடு நடத்த எப்படி அனுமதி கொடுத்தீர்கள் என்பது போன்ற ஒரு கருத்தை இங்கே எழுப்பினார். தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு, திரு. நெடுமாறன் தலைமையில் 19-1-1997 அன்று மதுரை தமுக்கம் மைதானத்தில் தமிழர் எச்சரிக்கை மாநாடு என்ற பெயரில் மாநாடு நடத்த இருந்தார்கள். இதற்குக் காவல் துறை அனுமதி மறுத்துவிட்டது. இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட Writ மனுமீது சென்னை உயர் நீதிமன்றம் மாநாடு நடத்த அனுமதி வழங்கிவிட்டது. உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கிய காரணத்தால்தான் மதுரையிலும், தொடர்ந்து திருவாரூரிலும், இராணிப்பேட்டையிலும் மாநாடு நடத்த, அந்தக் கூட்டங்கள் நடத்த அனுமதிக்கப்பட்டன. அவைகூட பெரிய அளவில் நடைபெற்ற மாநாடுகள் அல்ல. ஆனால் அந்த நேரத்திலே இலங்கையிலும் இதுபோன்ற அளவிற்கு தீவிரமான நிலையில்லை. இருந்தபோதிலும்கூட, நீதிமன்றத்தினுடைய அந்தத் தீர்ப்புக்கு நாம் கட்டுப்பட வேண்டியவர்களானோம். எனவே அப்போது தடை விதிக்கப்படவில்லை. இந்த நேரம் மிகத் தீவிரமான நேரம். இலங்கையிலே தீவிரமான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரம்.

7-5-2000 அன்று சிதம்பரத்தில் ஈழத் தமிழர் ஆதரவு மாநாடு நடத்துவதாக முதலில் அறிவித்துவிட்டு பின்னர் இலங்கையில் விடுதலைப் புலிகள் ஆனையிறவு வெற்றி மாநாடு என்ற பெயரால் மாநாடு நடத்தப் போவதாக அறிவித்தார்கள். இலங்கையில் தற்போது நிலவி வரும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும், கூட்டம் நடத்தவிருந்த திருமண மண்டபத்திற்கு அச்சுறுத்தல்கள் வந்ததாலும், சட்டம் ஒழுங்கைக் கருதியும் இந்த மாநாட்டிற்கு அரசு தடை விதித்தது.

தடையைமீறி மாநாட்டிற்கு வந்திருந்த 258 பேர் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு அவர்கள் வைக்கப்பட்டிருந்த திருமண மண்டபத்திலே அவர்களுக்கு என்று ஒலிப்பெருக்கி எதுவும் கொடுக்கப்படவில்லை. ஒலிப்பெருக்கி இல்லாமலே—நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்திருக்கிறோம், நீங்கள் இப்போது இருக்கிறீர்கள், கைது செய்யப்பட்டு கொண்டுபோய் காவல் நிலையத்திலே வைத்தாலே அங்கே நாம் ஒரு கூட்டத்தை நடத்திவிடுவோம். இது இயற்கை. நாங்கள் ஜெயிலில் இருந்தபோதுகூட—6 மாதம் நான் ஜெயலில் இருந்தபோதும் சரி, பிறகு 3 மாதம், 2 மாதம் இருந்தபோதும் சரி, அங்கே, ஜெயிலுக்குள்ளே கூட்டம் நடத்துவதுதான் வழக்கம். அது மாதிரி நடந்த கூட்டம்தானே தவிர அரசாங்கத்தினுடைய அனுமதியோடு நடைபெற்ற கூட்டம் அல்ல என்பதை நான் நம்முடைய நண்பர் செல்லக்குமார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-15*

விடுதலைப் புலிகளை அனுமதிக்கக் கூடாது என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே உணர்ச்சி வசப்பட்டு சில கருத்துகளைச் சொன்னார்கள். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் என்றாலே, இலங்கையில் உள்ள தமிழீழத்தை ஒரு காலத்திலே ஆதரித்தோம் என்ற காரணத்திற்காக அல்லது இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள் என்பதற்காக கண்ணீர் உகுத்தோம் என்ற ஒரு காரணத்திற்காக அந்தப் போராளிகள் செய்கின்ற எல்லாக் காரியங்களையும் நாங்கள் ஆதரித்தவர்கள் அல்ல. இங்கே சொன்னார்கள் அமிர்தலிங்கத்தைப்பற்றி. அதைப்போல ஸ்ரீசபாரத்தினத்தைப் பற்றி. அவர்களெல்லாம் எனக்கு மிக நெருங்கிய நண்பர்கள். அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. வெவ்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள். நான்கு, ஐந்து இயக்கங்கள் அதிலே இருந்தன. இந்த நான்கு, ஐந்து இயக்கங்களும் இந்தியாவிலே இறக்குமதியானபோது ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு இயக்கத்திற்குப் பின்னணியிலே இருந்து அவர்களுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். அந்த நிலையிலேதான் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுதலைப் புலிகள் — இவர் சொல்லுகின்ற Tigers (L.T.T.E.) அவர்களுக்கு, அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நிறைய உதவிகளைச் செய்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் சில குழுக்கள் அன்றைக்கு வந்தன. 'TELO' போன்ற குழுக்கள் எல்லாம் அன்றைக்கு எங்கள் பக்கம் வந்து எங்களுடைய ஆதரவைக் கோரினார்கள்.

E.P.R.L.F. என்ற ஒரு group இருந்தது. அவர்கள் சில கட்சிகளுடைய தயவை நாடினார்கள். இப்படி நான்கு ஐந்து groups இருந்தபோது, குழுக்கள் இருந்த அந்தக் காலகட்டத்தில் நாங்கள் எல்லோரையும் சமமாக நினைத்துத்தான் உதவினோம். என்னுடைய பிறந்தநாள் ஒன்றிற்கு உண்டியலிலே போடப்பட்ட பணத்தை எல்லாக் குழுவினருக்கும் பகிர்ந்தளிப்பதாக அறிவித்து, அப்படி அந்த அறிக்கையை நான் வெளியிட்டபோது மூன்று, நான்கு குழுக்கள் வந்து வாங்கிக்கொண்டார்கள். விடுதலைப் புலிகள் மாத்திரம் வந்து வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார்கள். நான் கொடுப்பதை வாங்கிக்கொள்ள முடியாது என்று மறுத்துவிட்டார்கள். காரணம் அங்கேயே group-ஆக இருந்துதான் வந்தார்கள், இங்கே வந்தாலும் இங்கே வேறு group இவர்களுக்கு. அதனால் வாங்கினால் யாரோ கோபித்துக் கொள்வார்கள் என்பதற்காக வாங்காமல் இருந்துவிட்டார்கள். அது நாடறிந்த இரகசியம். பிறகு அந்தப் பணத்தை மறுபடியும் பிரித்து மிச்சம் இருக்கிற குழுக்களுக்கே கொடுத்துவிட்டேன். விடுதலைப் புலிகள் வாங்க மறுத்துவிட்டார்கள். அந்த அளவுதான் எனக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உள்ள தொடர்பு என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பத்மநாபா கொலையைப்பற்றி நம்முடைய டாக்டர் செல்லக்குமார் அவர்கள்கூடப் பேசினார்கள். பத்மநாபா கொலை நடந்தது 19-6-1990. அதற்குப்பிறகு 4 மாதங்கள் கழித்து 4-10-1990-லே முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளுக்கு ஒரு தனிப் பேட்டி கொடுக்கிறார்கள். அந்தப் பேட்டியில் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? 'பத்மநாபா கொலைக்குப் பிறகு புகார் கூறுகிற அளவுக்கு விடுதலைப் புலிகள் எந்தக் காரியத்திலும் ஈடுபடவில்லை' என்று ஒரு Certificate கொடுக்கிறார்கள். இது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே 4-10-1990 அன்று வந்த அவருடைய பேட்டி, ஜெயலலிதா அவர்களுடைய பேட்டி.

"சிங்கள இராணுவமும், காவல் துறையும் இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் துணிவான போராட்டத்தில் ஈடுபட்டு சிங்கள இராணுவத்தை எதிர்த்து தீரத்தோடு போர் நடத்தி வருகிறது. கடந்த இரு மாதங்களில் தமிழ்நாட்டில் புகார் கூறும் அளவுக்கு எந்தவிதமான

நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை. இப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நாட்டின் அரசாங்கத்தை எதிர்த்துப் போர் நடத்தி வருகின்றது. இது ஒரு அதி தீரமான செயல்......

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டால் இலங்கையில் உள்ள தமிழினம் முழுவதும் அழிந்துவிடும் என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகளினுடைய வெற்றி, இலங்கைத் தமிழர்களின் வெற்றியாகும். அவர்களுக்கு உதவும் வகையில் எதுவும் செய்வதற்குப் பதிலாக, தமிழக முதலமைச்சர் கருணாநிதி தன்னைப் பாதுகாத்துக்கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். அவருடைய அனைத்து சக்தியும் மற்றும் கவனம் முழுவதும் முதலமைச்சருடைய நாற்காலியைப் பாதுகாத்துக்கொள்வதற்கே அர்ப்பணிக்கப்பட்டு வருகின்றது''

என்று என்மீது குற்றஞ்சாட்டி விடுதலைப் புலிகளுக்கு நான் உதவவில்லை என்பதை பத்திரிகையிலே தனிப் பேட்டியாகக் கொடுத்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள் என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதுமாத்திரமல்ல.................. (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் இராஜிவ் காந்தி இங்கே தமிழகத்திற்கு வந்து கொலை செய்யப்பட்ட பிறகு உள்ள நிகழ்ச்சி ஒன்று. இராஜிவ் காந்தி நிகழ்ச்சிக்கு முன்பு அவர்களுடைய நிலைமை வேறு. அதை விடுதலைப் புலிகள்............

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை யாரும் மறுக்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் தேதியைச் சொல்லும்போதே அது தெளிவாகத் தெரிகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் அதை மறுக்கவில்லை. ஆனால் பத்மநாபா கொலைக்குப் பிறகு நாங்கள் விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. பத்மநாபா கொலைக்குப் பிறகே செல்வி ஜெயலலிதா அவர்கள் விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டு விடுத்த அறிக்கை இது. (குறுக்கீடு) போதும், போதும், அதற்குமேலே பேசமுடியாது. போதும் போதும். பத்மநாபா கொலைக்குப் பிறகு ........... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், தெளிவாகச் சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகு நீங்கள் ஏன் எழுந்து நின்று கொண்டிருக்கிறீர்கள்? நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பத்மநாபா கொலைக்குப் பிறகு என்றுகூடச் சொல்லமாட்டேன். அதற்கு முன்பே அமிர்தலிங்கத்தினுடைய கொலையானாலும் 'TELO'-வினுடைய தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தினுடைய கொலையானாலும் அதைப்போல வேறு சில போராளிகளுடைய கொலை, போராளிக் குழுவினுடைய தலைவர் உமாமகேஸ்வரன் அவர்களுடைய கொலையானாலும் இந்தக் கொலைகள் எல்லாம் நடந்த பிறகு, தன்னுடைய இனத்திலே உள்ளவர்களையே அழித்துவிட்டு தன்னுடைய இனத்தை எப்படிக் காப்பாற்ற முடியும் என்கின்ற அந்த ஆதங்கம் எங்களுக்கு ஏற்பட்டது. அதனால் நாங்கள் விடுதலைப் புலிகளை ஆரம்பத்திலிருந்தே எந்த அளவுக்கு ஆதரித்தோமோ அந்த அளவுக்கு ஆதரிக்கவில்லை, நாங்கள் ஒதுங்கிவிட்டோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்வதற்காகத்தான் இதைக் கூறுகின்றேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை என்று சொன்னதற்குப்பின் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போதும்கூட, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான கடத்தல்காரர்கள் 51 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி (N.S.A.) கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். 4 wireless கருவிகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் சொல்ல விரும்புகின்றேன். 1996 மே மாதத்திற்குப் பிறகு L.T.T.E. சம்பந்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் ஒன்றுகூட நடைபெறவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். 1991-96 ஆகிய 5 ஆண்டுக் காலத்திலே பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்தப் பழைய கதைக்கெல்லாம் நான் மீண்டும் செல்ல விரும்பவில்லை.

'பங்களாதேஷ் பிரச்சினையில் இந்திரா காந்தி செய்ததைப் போல இராணுவ நடவடிக்கைபற்றி இந்தியா சிந்தித்தால் அதில் தவறு எதுவும் இல்லை என்று கருதுகிறேன்'

என்றுகூடச் சொன்னவர்தான் ஜெயலலிதா; இந்து பத்திரிகையிலே 29-4-1991 அன்று வந்தது. பிறகு அவரது கருத்தை மாற்றிக்

இஸ்லாமியர்கள் 2.67 சதவிகிதம்; அல்லாதவர்கள் 97.33 சதவிகிதம் என்ற இந்த விவரத்தை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விரைவான புலன் விசாரணை நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு அன்று பேசிய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரால் எடுத்து வைக்கப்பட்டது. நம்முடைய சுந்தரம் அவர்களும் அதே கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நத்தை வேகத்திலே காவல் துறை நடைபெறுவதாக அன்றைக்கு அவர்கள் கூறினார்கள். எந்த அளவுக்குத் தீவிரமாக, விரைவாக புலன் விசாரணை நடைபெற்று, குற்றப் பத்திரிகைகள் எல்லாம் கொடுக்கப்பட்டு, விசாரணையும் முடிவுற்று, தண்டனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதற்குச் சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிப்பது என்னுடைய தலையாய கடமையாகும்.

கோயம்புத்தூரில் நடந்த வெடிகுண்டுச் சம்பவங்களை விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு தீவிரமாக விசாரணை செய்து, 175 குற்றவாளிகளைக் கைது செய்தது. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் விசாரணை முடிக்கப்பட்டு 5-5-1999 அன்று 180 பேருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சென்னையிலிருந்து திருச்சி, ஈரோடு, திருச்சூர் சென்ற ரயில்களில் 6-12-1997 அன்று குண்டு வெடித்து, 10 பேர் இறந்த சம்பவத்தைப் புலனாய்வு செய்த சிறப்புப் புலனாய்வுக் குழு, குற்றவாளிகள் ஒன்பது பேரை விரைந்து கைது செய்தது.

சென்னை, கோவை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் 30-5-1999 அன்று குண்டு வைத்த குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். சென்னை இந்து முன்னணி அலுவலகத்தை வெடி வைத்துத் தகர்த்த வழக்கு, திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் வீட்டின்மீது குண்டு வீசப்பட்ட வழக்கு, சென்னையில் மூன்று ஓட்டல்களில் குண்டு வெடிக்கப்பட்ட வழக்குகள்—முந்தைய ஆட்சிக்காலத்தின்போது நிகழ்ந்து—நீண்டகாலமாக நிலுவையிலிருந்தன. அந்த வழக்குகள், கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் விரைந்து புலன் விசாரணை செய்யப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

அல்லது ஒன்றிரண்டு நிகழ்வுகளில் சில அதிகாரிகளால் தவறுகள் கூட ஏற்பட்டிருக்கலாம். அவற்றையெல்லாம் நம்முடைய செல்லக்குமார் அவர்கள்கூட அன்றைக்குச் சுட்டிக்காட்டினார்கள். அவையெல்லாம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, அவை மறுபடியும் ஒழுங்குபடுத்தப்பட்டன என்பதை அறிவீர்கள். ஆனால் இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளினால் நிதி நிறுவனங்களுடைய மோசடிகள் மக்கள் மன்றத்திலே அம்பலமாக்கப்பட்டன. அதுவும் குறிப்பாக, இந்தியாவிற்கே வழிகாட்டியாக, 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிறுவன வைப்பீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தை இந்த அரசுதான் முதன்முதலாக இயற்றியது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மோசடி சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க சென்னையிலே தனி நீதிமன்றம் ஒன்றை அமைத்தது. தனி நீதிமன்றம் என்றால் அந்த நீதிமன்றம் அல்ல. இது வேறு. இந்த மோசடிக்காக, நிதி நிறுவனங்களுடைய மோசடிக்காக தனி நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். மோசடி நிதி நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்க பொருளாதாரக் குற்றப் பிரிவு-2 என்ற புதிய காவல் துறைப் பிரிவை இந்த அரசு 1999-ல் ஏற்படுத்தியது. இதுவரையில் பொருளாதாரக் குற்றப் பிரிவில் மொத்தம் 235 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இவற்றில் 4 வழக்குகளில் எதிரிகள் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டபடியால் மேல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்களில் கடன் பெற்றவர்கள் இருக்கிறார்கள். நிறைய கடன் பெற்றுவிட்டு கட்டாமலேயே விட்டுவிடுகிறார்கள். அதனால் deposit செய்தவர்களுக்குப் பணம் கிடைக்க வழியில்லாமல் இருப்பதால், நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்றவர்களின் சொத்தை attach செய்கின்ற முறையில் சட்டத்திருத்தம் செய்ய வேண்டுமென்ற வலியுறுத்தல் இருக்கிறது. அதுகுறித்து மாநில அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-25*

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்களிலே மோசடி செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்லுகின்றபோது மிகத் தெளிவாகச்

சொல்லியிருக்கிறேன். நீதிமன்றத்திலே காவல் துறையைக் கண்டிப்பு செய்த பிறகு, கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாகியிருக்கிறது. 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்ட பிறகும்கூட அவர்கள் தப்பிவிட்டார்கள் என்று சொல்கின்ற சூழ்நிலை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. பல நிதி நிறுவனங்களினுடைய அதிபர்கள் SRI MARIAS என்று சொல்கின்ற நிறுவனம், NEW INDIA FINANCE என்கிற நிறுவனம், RICHARD AND CLIFF என்கிற நிறுவனம் போன்ற பல நிறுவனங்களினுடைய அதிபர்கள் இதுவரை கைது செய்யப்படாமல், அவர்கள் தப்பித்துவிட்டார்கள் என்று காவல் துறை அதிகாரிகள் சொல்கின்ற சூழ்நிலை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னதுபோல, நான் ஏற்கெனவே கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது, இந்தக் கருத்தை வலியுறுத்தினேன். ஏனென்று சொன்னால், கடன் பெற்றவர்கள் செல்வாக்கு பெற்றவர்கள். பல்வேறு அரசியல் தலைவர்களுடைய பின்னணியிலே செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள்; பல்வேறு அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியிலே செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள்; கோடிக்கணக்கான ரூபாய்க்கு கடனைப் பெற்றுவிட்டு, அந்த நிதி நிறுவனத்தினுடைய அதிபர்கள் கைது செய்யப்பட்ட பிறகு, தாங்கள் தப்பித்துக் கொண்டோம் என்கிற சூழ்நிலையில், அவர்கள் இப்போது தப்பிக்கின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய சொத்துக்களை அரசு கையகப்படுத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு இப்போது நடைபெற்று வருகிற அந்த வழக்குகளில் சாதக பாதகமாக என்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, அவர் கூறிய அந்தக் கருத்தை இணைத்து, சட்டப்படி யோசித்து ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். செல்லக்குமார் எழுப்பியது; ஏதோ ஒன்றிரண்டு பேர் தப்பித்துக் கொண்டார்கள் என்று நானே ஒத்துக்கொண்டு சொன்னேன். அவர் அந்தப் பெயர்களைச் சொல்ல வேண்டும்; ஏதோ அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியிலே இருக்கின்றன என்பதையெல்லாம் இங்கே சொல்ல வேண்டும் என்று எண்ணிச் சொல்கின்றார். அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியில் இருக்கின்றன என்று சொல்கின்ற காரணத்தால், அது திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆகிவிடாது. எந்த அரசியல் இயக்கமும்

இருக்கலாம். எந்தெந்த அரசியல் இயக்கங்கள் எதெதிலெல்லாம் பின்னணியாக இருக்கின்றன என்பதை நான் மிக நன்றாக அறிவேன்; நாடும் மிக நன்றாக அறியும். எனவே அதைச் சொல்ல விரும்பவில்லை.

இதுவரை 235 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் நான்கு வழக்குகளில் எதிரிகள் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டபடியால் மேல்நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருக்கின்றன. அவர்கள் முழுப் பணத்தையும் செலுத்திவிட்டார்கள். ஆகவே மேல் நடவடிக்கை கைவிடப்பட்டிருக்கின்றது. மேலும் நான்கு வழக்குகளில் எதிரிகள் மீது புதிதாக இயற்றப்பட்ட 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிறுவன வைப்பீட்டாளர்களின் பாதுகாப்புச் சட்டப்படி தண்டனையில் முடிந்து நிதி நிறுவன உரிமையாளர்களுக்கு அதிகபட்சத் தண்டனையாக 10 வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு 1 இலட்ச ரூபாய் அபராதமும் மற்றும் மூவருக்கு தலா 50,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

41 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, பல்வேறு நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன. இவ்வழக்குகளில் 17 வழக்குகள் சென்னையிலே தனி நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன. மேற்படி 235 வழக்குகளில் 8 இலட்சத்து 24 ஆயிரத்து 724 முதலீட்டாளர்களின் 1,477 கோடி ரூபாயை பல்வேறு மோசடி நிதி நிறுவனங்கள் ஏமாற்றியுள்ளன. ஒன்றிரண்டு அல்ல. 1,477 கோடி ரூபாய். இதுவரை மொத்தம் 1 இலட்சத்து 32 ஆயிரத்து 589 புகார்கள் பெறப்பட்டுள்ளன. 1,048 கோடி ரூபாய் மதிப்புள்ள நிதி நிறுவனங்களின் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டுவிட்டன. 1,477 கோடியில் 1048 கோடி ரூபாய் மதிப்புள்ள நிதி நிறுவனங்களின் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேற்படி 235 வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள 725 நபர்களில் 301 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மீதமுள்ள 302 எதிரிகளைக் கைது செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நிதி நிறுவன மோசடி வழக்குகளில் 34 நிதி நிறுவனங்களுக்குச் சொந்தமான 314.83 கோடி ரூபாய் மதிப்புள்ள அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை காவல் துறை கண்டுபிடித்து, சொத்துக்கள் முடக்கப்பட்டு, மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காவல் துறையின் நடவடிக்கையால் இதுவரை முதலீட்டாளர்களுக்கு 103 கோடியே 62 இலட்ச ரூபாய் பெற்றுத் தரப்பட்டுள்ளது என்பதையும்

நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, பொதுமக்கள் இனிமேலாவது ஏமாறாமல் இருக்க வேண்டும் என்றுதான் இந்தப் புள்ளிவிவரத்தின் மூலமாக நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனை செய்திகள் வந்தாலும், மறுபடியும் இன்னொரு நிதி நிறுவன மோசடி என்று வருகிறது. காரணம், பொதுமக்கள் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, அங்கே கொண்டுபோய் பணத்தைப் போடுகிறார்கள். பணத்தைப் போட்டுவிட்டு ஏமாந்த பிறகு, அதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு; வாங்கிக் கொடு என்று பழியை நம் தலையிலே போடுகிறார்கள். பல சாமியார்களிடம் ஏமாந்தாலும்கூட, புதுப்புது சாமியார்கள் முளைத்துக்கொண்டு இருப்பதைப்போல, இந்த நிதி நிறுவனங்களில் ஏமாந்தாலும்கூட, புதுப்புது நிதி நிறுவனங்கள் முளைத்துக் கொண்டேதான் இருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-30*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவன மோசடியில், ஆரணி, குடியாத்தம், வேலூர் போன்ற பகுதிகளிலே, பணத்தைப் பெற்றுக் கொண்டு, அவர்கள் cash certificate என்று கொடுப்பதற்குப் பதிலாக, pro-note என்று கொடுத்து விட்டிருக்கிறார்கள். இந்த pro-note என்கிற வார்த்தையை வைத்துக்கொண்டு, இதற்கு civil வழக்குப் போட்டுத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமேயொழிய, நாங்கள் criminal சட்டப்படி நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்று வழக்கும் பதிவு செய்யாமல், கைதும் செய்யாமல் காவல் துறையினர் இருந்து கொண்டிருக்கிறார்கள்; எந்தப் பொருளையும் seize செய்யாமல் இருக்கிறார்கள். pro-note என்று அவர்கள் மோசடியாக எழுதியிருக்கிற காரணத்தினால், அதை மோசடிக் குற்றமாகச் சேர்த்து, இந்தச் சட்டத்திலே கொண்டுவந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அது pro-note ஆக இருக்கிற வரையிலே pro-note தான். அது மோசடி என்று கண்டுபிடிக்கிற வரையிலே அது pro-note ஆகத்தான் இருக்கும். அதற்குள்ள சாஸ்திரம், சம்பிரதாயம் என்று இருக்க முடியுமே தவிர, pro-note-ஐப்போய் திடீரென்று மோசடி என்று சொல்ல முடியாது. அது pro-note இல்லை; அது மோசடி என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகு

வேண்டுமானால், இரண்டுக்கும் சேர்த்து அவர்கள்மீது வழக்குத் தொடரலாம்.

இன்னொன்றையும் சொன்னார், செல்லக்குமார். வடபழனி காவல் நிலையம் நான் கேட்டேன்; நீங்கள் கொடுத்தீர்கள்; ஆனால் அந்தக் காவல் நிலையத் திறப்பு விழாவிற்கு எனக்கு அழைப்பு இல்லை; என்னைக் கூப்பிடவில்லை என்று சொன்னார். அதிலே பாதி உண்மை. காவல் நிலையம் கேட்டது உண்மை; நான் கொடுத்தது உண்மை. ஆனால் அதற்குத் திறப்பு விழா நடக்கவில்லை. நடந்தால்தானே கூப்பிட முடியும்? நடக்கவில்லை. (குறுக்கீடு) எல்லாவற்றுக்கும் இப்படி எழுந்து நின்றால் எப்படி?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தவறாகச் சொல்லவில்லை; பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் சொல்கிறேன். எனக்கு வந்த தகவலை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) எனக்கு வந்த தகவல்...(குறுக்கீடு) நான் தகவலைச் சொல்வதற்கு முன்னால் சொன்னால் எப்படி? நான் அதிகமாக இடம் கொடுத்து உட்காருகிறேன் என்பதற்காக சும்மா சும்மா எழுந்திருப்பதா? நான் கொஞ்சம் ஓய்வு எடுக்கலாம் என்பதற்காக உட்காருகிறேன்; அவ்வளவுதான். (சிரிப்பு) ஏற்கெனவே, கோடம்பாக்கத்திலே ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையத்திலே, நான் செல்லக்குமாருக்குக் கொடுத்த அந்த வடபழனி காவல் நிலையத்தையும் அங்கே வைத்து, இரண்டு பேரையும் வைத்து, ஒண்டிக் குடித்தனம் வைத்து நடத்தினார்கள் கொஞ்சம் நாட்கள். கொஞ்சம் நாட்கள் நடத்தினார்கள். அதற்குப் பிறகு, அந்தக் கோடம்பாக்கம் காவல் நிலையத்தை அங்கேயிருந்து அகற்றிவிட்டார்கள். 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்தியது' மாதிரி'. (சிரிப்பு) உங்கள் பிடாரி—வடபழனி காவல் நிலையம்—அங்கே இருக்கிற கோடம்பாக்கம் காவல் நிலையத்தை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தியது. அந்தக் கோடம்பாக்கம் காவல் நிலையம் வேறு இடத்திற்குப் போன பிறகு, பழைய கோடம்பாக்கம் காவல் நிலையத்திற்குத் திறப்பு விழா. திறப்பு விழா என்றால், invitation கிடையாது. யாருக்கும் அழைப்பு என்று எதுவும் கிடையாது. சும்மா அதிகாரிகள்போய் குத்து விளக்கு ஏற்றி வைத்தார்கள் பழைய காவல் நிலையத்திற்கு. புதிய காவல் நிலையத்திற்கு அதுகூட நடக்கவில்லை. அதனால்தான் செல்லக்குமார் அழைக்கப்படவில்லை. நான் செல்லக்குமார் போன்றவர்களெல்லாம் அழைக்கப்படவில்லை

.என்பதற்காக வருத்தப்படுவேனே தவிர, அதற்காக மகிழ்ச்சியடையக் கூடியவன் அல்ல என்பதையும் அவர் உணர வேண்டும்.

உதவி ஆய்வாளர் சம்பத்துக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை என்று சொன்னார். அவர் செய்தது வெடிகுண்டு இருக்கிற இடத்தைப் போய் கண்டுபிடித்தார் என்பது. அதோடு அந்த வெடிகுண்டு வெடிக்குமா, வெடிக்காதா என்று பார்த்தார் என்கிற ஒரே தீரச் செயல்தான். வேறு ஒன்றும் இல்லை. ஆனால் சந்திரசேகரனுக்கு கோயம்புத்தூர் நிகழ்வில் கொடுத்தோம் என்றால் அவர், துப்பாக்கிப் பிரயோகத்தின் இடையிலே புகுந்து, வீரசாகசம் புரிந்து, அங்கே சமாளித்தார் என்பதற்காகத்தான் அவருக்கு பதக்கம் எல்லாம் கொடுத்தோம்; பதவி உயர்வு கொடுத்தோம். இவர் அப்படி அல்ல. இருந்தாலும்கூட சம்பத் அவர்களைப் பாராட்டி, 1,500 ரூபாயும், ஒட்டுமொத்தமாக அந்தக் குழுவினருக்கு 18 ஆயிரம் ரூபாயும் வெகுமதி வழங்கப்பட்டது. இவருக்கு குடியரசுத் தலைவர் விழாவில் விருது அல்லது பதக்கம் வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நமது திரு. ஜி.கே. மணி அவர்கள், வன்னியர் சங்கம் வழக்குகள் எல்லாம் வாபஸ் ஆகவில்லை என்று சொன்னார். சில வழக்குகள் G.O.-விற்குப் பிறகு அல்லது நீதிமன்றத்திலே சில தேக்கத்தின் காரணமாக வாபஸ் ஆகாமல் இருக்கலாம். அவை தவிர, வாபஸ் செய்ய வேண்டும் என்று எல்லாவற்றுக்கும் பொதுவான உத்தரவு போட்டாகிவிட்டது. 722 வழக்குகள்—1986 முதல் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் 722 வழக்குகள் அந்தச் சங்கத்தின் மீது இருந்தன அந்த ஆட்சியில். அவற்றில் நீதிமன்ற நிலுவையில் இருந்தது 409. எல்லாவற்றையும் சேர்த்து மூன்றே மாதங்களில், அரசு ஆணை எண் 854, பொதுத் துறை, தேதி 1-8-1996-இன்படி, திரும்பப்பெற ஆணையிடப்பட்டுவிட்டது. இவை தவிர, புலன் விசாரணையில் இருந்தவை என்ற அடிப்படையில் 72 வழக்குகளில் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டுவிட்டது. 137 வழக்குகள் பல்வேறு காரணங்களுக்காக நீதிமன்றத்திற்கே செல்லாமல் கைவிடப்பட்டன. 104 வழக்குகள் அரசிடம் கோரிக்கை வைக்கப்படுவதற்கு முன்பாகவே நீதிமன்றத்தாலும், காவல் துறையினராலும் முடிக்கப்பட்டுவிட்டன. எனவே ஏதாவது மிச்சம் மீதி இருந்தால், அதைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டினால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

**திரு. இரா. தாமரைக்கனி:** எங்களுடைய பகுதியிலே, ஜாதிக் கலவரம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமரைக்கனி, கையை, கையைக் காண்பித்தால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவையும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றன.

சென்னையில் ஊர்வலம் நடத்த அனுமதியில்லையென்று பழனிசாமி அவர்களும் சொன்னார்கள்; ஹேமச்சந்திரன் அவர்களும் அன்றைக்குப் பேசினார்கள். சென்னை மாநகரத்திலே போக்குவரத்து நெருக்கடி காரணமாக, சில வரைமுறைகளைக் காவல் துறையினர் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இருந்தாலும்கூட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, 1999-ஆம் ஆண்டு அனுமதி கோரிய நிகழ்வுகள் 75. அந்த 75-லே 56 நிகழ்வுகளுக்கு, அவர்கள் கோரிய இடத்திலேயே அனுமதி தரப்பட்டிருக்கிறது. 19 நேர்வுகளிலேதான் அனுமதி தரப்படவில்லை. இந்த ஆண்டு ஜனவரி முதல் 30-4-2000 வரை, அதே கட்சியினர் 33 முறை அனுமதி கோரினார்கள். 28 நிகழ்வுகளில் அவர்கள் கோரிய இடம் தரப்பட்டிருக்கிறது. 5 நிகழ்வுகளிலே மாத்திரம்தான் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்குவது குறித்து நம்முடைய காவல் துறையினருக்குச் சொல்லியிருக்கிறேன். அனுமதி கேட்கும்போது, இரண்டு இடங்களைக் குறிப்பிட்டு அல்லது மூன்று இடங்களைக் குறிப்பிட்டு, இந்த மூன்றில் எந்த இடத்தை நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள் என்று அவர்களுக்கு எழுதுங்கள்; அந்த மூன்றில் ஒன்றையோ, இரண்டில் ஒன்றையோ எடுத்துக் கொள்ளட்டும் என்று நான் காவல் துறையினருக்குச் சொல்லி இருக்கிறேன். எனவே அந்தப் பிரச்சினை இனி எழாது.

நம்முடைய சுப்பராயன் அவர்கள் மோகனாம்பாள் கொலையைப்பற்றியும் அஞ்சலை கொலையைப்பற்றியும் பேசினார்கள். ஏதோ ஒரு பழைய காலத்து நாவலுக்கு தலைப்பு மாதிரி பேசினார்கள். அவர்களுக்கு எழுதி அனுப்பப்பட்ட அந்த முறையீட்டைப் படித்தால் உருக்கமாக இருக்கிறது. நான் இல்லை என்று மறுக்கவில்லை. எப்பொழுதுமே அந்த முறையீடுகளையும், மனுக்களையும் படித்துவிட்டு, அதை முழுவதும் நாம் உண்மை என்று நம்பிவிட முடியாது. ஆனால் உண்மை அல்ல என்றும் நான் எடுத்துக்கொள்ளவில்லை. அதையும்

நான் சுப்பராயன் அவர்களுக்குச் சொல்கிறேன். ஆனால் முருகேசன் வழக்கைப் பொறுத்தவரையில், அது குற்றப் பத்திரிகையாகவே தாக்கல் செய்யப்பட்டுவிட்டாகிவிட்டது. இங்கே சொன்னார்கள். கடைசி நேரத்திலேதான் எங்களுக்கு அனுப்புகிறார்கள், அதுவரையிலும் அனுப்புவதில்லை என்று. அதேமாதிரி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த பிறகு, இந்த விவரங்களை சுப்பராயன் அவர்கள் என்னிடத்திலே இங்கே கொடுத்திருக்கின்றார்கள். அதைப்பற்றி நான் விசாரித்தேன். இந்த வழக்கிலே, அந்த முருகேசன் தன்னுடைய மைத்துனியையும் கல்யாணம் செய்துகொள்வதற்கு விரும்பியிருக்கிறார். அதனாலே ஏற்பட்ட தகராறு. அதனாலே விளைந்த கொலை. அது ரங்கோன் ராதா மாதிரி நடந்திருக்கிறது.

எனக்கு தந்தத் தகவலைச் சொல்கிறேன். தகவல் வேறாக இருந்தால் திருத்திக்கொள்ளலாம். ஆனால் குற்றப் பத்திரிகை வரையிலும் வந்தாகிவிட்டது.

முருகேசன் தனது மைத்துனியையும் திருமணம் செய்துகொள்ள விரும்பியதாகவும் அதைத் தொடர்ந்து அவர் மனைவியைக் கொலை செய்துள்ளார் என்றும் காவல் துறை கூறுகிறது. கணவன் மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு நடந்ததற்கும் கொலை நடைபெற்றதற்கும் சாட்சிகள் வாக்குமூலம் கொடுத்து அது குற்றவியல் நடுவர் முன்னால் பதிவு செய்யப்பட்டுள்ளது. முருகேசனிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு அவரிடமிருந்து, இறந்துபோன அந்தப் பெண்மணியினுடைய காது தோடும் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த வழக்கிலே விசாரணை முடிந்து குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு, வாய்தா *6-6-2000* அன்று போடப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை குறித்து ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட இயக்கத்தினர் புகார் செய்ததன்பேரில், C.B., C.I.D. இந்த வழக்கை மேற்பார்வை செய்து, ஒழுங்காக விசாரணை நடைபெற்றதாக, அவர்களும் ஒரு மதிப்பீடு செய்து, விசாரணை செய்து ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதைப்போலவே விழுப்புரம் மாவட்டத்திலே, அஞ்சலை என்ற பெண், காவல் துறையினர் மிரட்டியதன் காரணமாக தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவித்தார். இந்த வழக்கில் அஞ்சலை, ராஜா என்பவரைக் காதலித்தார். காதலித்து அது கருவுறுகிற வரையிலே வந்து, அதற்குப் பிறகு அந்தக் காதலன் மறுத்துவிட அதன் காரணமாக, இறந்துவிட்டாரே தவிர, காவலர்கள் மோசமாகப் பேசினார்கள். ஆகவே

அவர் தன்னை கொலைக்கு உள்ளாக்கிக் கொண்டார் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. இந்த வழக்கிலே காவல் துறையினருக்கு சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

அஞ்சலையின் அண்ணன் கொடுத்த முதல் புகாரில், காவல் துறையினர்மீது எந்தத் தவறும் அஞ்சலையினுடைய அண்ணன் கூறவில்லை. அந்தப் புகார் மனுவில் எந்தத் தவறும் கூறவில்லை. மேலும் இதுகுறித்து ஐயப்பாடுகள் எழுமேயானால் முருகேசன் சம்பவத்திலே குற்றப் புலனாய்வுத் துறை உள்ளூர் காவலர்கள் செய்த விசாரணை முறையாக நடைபெற்றதா என்பதை சரிபார்த்ததைப் போல, விழுப்புரம் நிகழ்வுபற்றியும் குற்றப் புலனாய்வுத் துறைக்கு ஆணையிட்டு சரி பார்க்கச் சொல்கிறேன் என்கிற உறுதியை மாத்திரம் நான் திரு. சுப்பராயன் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12-40

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கே.ஆர். இராமசாமி இங்கே எழுப்பிய, பட்டு குருக்கள் கொலை, அதிலேயும் பல கோணங்களிலே போலீசார் துருவித் துருவி ஆராய்கிறார்கள். அதற்கு 3, 4 கோணங்கள் இருக்கின்றன. ஒரு கோணம் காதல் கோணம். ஆகவே காதல் இல்லாத கொலை என்று எதுவும் கிடையாது. (சிரிப்பு). அது அவருக்குத் தெரியும். கே.ஆர். இராமசாமிக்குத் தெரிந்திருக்கும்; தெரியாமல் இல்லை. இருந்தாலும் காதலை மறைத்துவிட்டு, பாக்கி விஷயங்களை மாத்திரம் அவர் இங்கே பேசியிருக்கிறார். புகழேந்தி என்கிறவரும், அவருடைய கூட்டாளிகளும் இந்தக் கொலைக்குக் காரணமாக இருப்பார்களோ என்ற சந்தேகமும் அதிகமாக ஏற்பட்டுள்ளது. இதற்கான நோக்கம் எதுவாக இருக்கும் என்று பல கோணங்களிலும் காவல் துறையினர் ஆராய்ந்து வருகின்றார்கள். C.B.,C.I.D. போலீசும் இதை மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. விரைவில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கூடும் என்ற உறுதியை காவல் துறை எனக்கு அளித்துள்ளது என்பதையும் நான் நம்முடைய கே.ஆர். இராமசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கள்ளச் சாராயம் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். அவர்களையெல்லாம் குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே கைது செய்ய வேண்டும் என்று கூறினார்கள். இப்போதே பல பேர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலேதான் கைது

தூத்துக்குடி, குமரி மாவட்டங்களைச் சேர்ந்த 48 கைதிகளை ஜாமீனில் விடுவித்துவிட்டார்கள். இந்த வழக்கில் குற்றவாளிகளான தூத்துக்குடியைச் சேர்ந்த குருமூர்த்தி, உடன்குடியைச் சேர்ந்த பொன் ஆதித்தன், சேரன்மகாதேவியைச் சேர்ந்த பாவநாசம் மற்றும் நாகர்கோவிலைச் சேர்ந்த பொன்ராஜ் ஆகியோரை ஆதாரங்களோடு கைது செய்து, போலியான ஜாமீன் உத்தரவுகள் தயார் செய்வது ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

நண்பகல் 12-00

பெரம்பலூர் மாவட்டத்தில் 1999 ஆம் ஆண்டில் 6 மாத காலத்தில் நடந்த வெவ்வேறு சம்பவங்களில், ஒதுக்குப்புறமாக இருந்த வீடுகளில் வசித்த 21 பெண்கள் ஒரே முறையில் கொலை செய்யப்பட்டார்கள். போலீசாரின் தீவிரமான புலன் விசாரணைக்குப் பிறகு இக்கொலைகளைச் செய்த மருதமுத்து என்பவர் கைது செய்யப்பட்டு குண்டர்கள் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைக்கப்பட்டார்.

கன்னியாகுமரி, தெரிசனம்கோப்பு என்ற இடத்தில் ஒரு தனியார் வங்கியின் (GSC) பாதுகாப்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு ரூ.60 இலட்சம் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்த வழக்கில் அனைத்துக் குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டார்கள். கொள்ளையடிக்கப்பட்ட அனைத்து நகைகளும் திரும்பக் கைப்பற்றப்பட்டன.

மதுரை மாநகராட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திருமதி லீலாவதி கொலை வழக்கில் ஆளுங்கட்சிக்காரர்கள் மீதே குற்றஞ்சாட்டப்பட்டது, என்றாலும் அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள், அதுமாத்திரமல்ல. வழக்கு முடியும்வரை அவர்கள் ஜாமீனில்கூட வரமுடியாமல், குற்றவாளிகள் ஆறு பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கோவையில் பச்சிலை ராமன் என்பவர் ஜக்கம்மா பூஜை என்ற பெயரில் சுமார் 20 அப்பாவிப் பெண்களைக் கடத்திச் சென்று உடலுறவு வைத்து பின்னர் திருப்பி அனுப்பியிருக்கிறார். 8-2-2000 அன்று இவர் கைது செய்யப்பட்டு ஓராண்டு தடுப்புக் காவல் சட்டத்திலே வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நேரத்திலே சில அறிவிப்புகளை காவல் துறையின் சார்பாக இந்த மாமன்றத்திலே வெளியிட நான் விரும்புகின்றேன். காவல் துறை இயக்குநர் அலுவலக வளாகம்—ஏற்கெனவே நம்முடைய கடற்கரை ஓரத்திலே வானொலி நிலையத்திற்குப் பக்கத்திலே இருந்த காவல் துறை தலைமை அதிகாரியினுடைய அலுவலகத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெற்று, அது இடிக்கப்படுகிற நேரத்திலே இந்த ஆட்சி பொறுப்பேற்று அதை இடிக்காமல் தடுத்து, அதே இடத்திலே பழைய கட்டடத்தையே பொலிவுபடுத்தி, வலிவுபடுத்தி, புதுமைக்கோலம் கொள்ளச் செய்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது அந்தக் கட்டடத்தை ஒட்டினாற்போல், வானொலிப் பிரிவு மற்றும் தடய அறிவியல் துறை ஆகியவற்றின் கட்டடங்கள் பழுது பார்க்க இயலாத அளவிற்கு உள்ளபடியால்—அவற்றை இடித்துவிட்டு புதிய கட்டடத்தை அல்ல—அதற்குப் பின்னால் இருக்கின்ற, ஒட்டியிருக்கின்ற சில பழைய கட்டடங்களை இடித்துவிட்டு—அந்த இடத்திலேயே புதிய கட்டடங்களைக் கட்டுவது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு வல்லுநர் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அந்தக் குழுவினுடைய அறிக்கை கிடைத்தவுடன் புதிய கட்டடங்கள், காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகக் கட்டடங்கள் அமைந்துள்ள அதே வடிவமைப்பில் கட்டுவதென்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

*பிற்பகல் 12-45*

தற்போதைய வேலூர் சரகம், வேலூர், தருமபுரி, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பெரிய சரகமாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரித்து சேலத்தில் ஒரு புதிய காவல் சரகம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சரகத்தின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி மாவட்டங்கள் இடம்பெறும். தற்போது விழுப்புரம் சரகத்தில் உள்ள திருவண்ணாமலை மாவட்டமும், வேலூர் மாவட்டமும் வேலூர் சரகத்தின்கீழ் இடம்பெறும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல்படையில் 11 அணிகளிலும் உள்ள வானொலி தொலைத் தொடர்புப் பிரிவில் தற்போதுள்ள 11 சார் ஆய்வாளர்கள் பதவிகளை 11 ஆய்வாளர் பதவிகளாகவும் மற்றும் 22 அவில்தார் பதவிகளை 22 சார் ஆய்வாளர் பதவிகளாகவும் நிலை உயர்த்தி ஆணை வழங்கப்படும்.

பொது மக்களின் புகார்களைப் பெறுவதற்கென்றே சென்னை மாநகரில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, காவல் துறைத் தலைவர் அலுவலகத்தில் ஒரு தனி தொலைபேசி நிறுவப்படும். இந்த எண்ணை தொடர்பு கொள்வதற்காகும் தொலைபேசிக் கட்டணத்தை அரசே ஏற்கும். புகார் செய்பவர்களுக்கு தொலைபேசிக் கட்டணம் கிடையாது. இந்த வசதி படிப்படியாக மற்ற நகரங்களுக்கும் விரிவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறு வணிகர் பாதுகாப்பிற்கு என்று Food Cell. Food Cell போலீசார் அரிசி, ration மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கடத்துபவர்கள் மற்றும் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்பவர்கள்மீது Criminal நடவடிக்கை எடுப்பதாகக் கூறி சிறு சிறு வணிகர்களை எல்லாம் பெரும் இன்னலுக்கு ஆளாக்கி வருவதாகப் புகார்கள் அரசுக்கு வந்துள்ளன. எனவே பிரத்தியேகமான வழக்குகளைத் தவிர மற்ற நேர்வுகளில் Food Cell போலீசார் சிறு சிறு வணிகர்களைத் தேவையில்லாமல் சோதனைகள் மற்றும் விசாரணைகளுக்கு ஆட்படுத்தக் கூடாது என்று அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

காவல் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து காவல் நிலையம் வரை கணினிமயமாக்கவும், பொது மக்கள் காவல் நிலையங்களைத் துரிதமாகத் தொடர்புகொள்ளவும் ஒரு திட்டம் உருவாக்கப்படுகிறது. இதன்மூலம் காவல் துறை—பொது மக்கள் தொடர்பு நவீன முறையில் சீரமைக்கப்படும். கணினி மூலம் பொது மக்கள் புகார்களைக் கொடுக்கவும் முதல் தகவல் அறிக்கை நகல் பெறவும் முடியும். இதனைச் செயற்படுத்த உள் துறைச் செயலாளர் தலைமையில் காவல் துறை இயக்குநர் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் துறைச் செயலாளர், கூடுதல் காவல் துறைத் தலைவர் ஆகியோரைக்கொண்ட உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்.

மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் அனைத்து அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படும். இதனால் ஆயத் தீர்வைத் துறை நிர்வாகத்தின் செயல்பாடுகள் மேம்படும்.

கணினி மூலம் தகவல் பெற்று சாராவி, இரசாயனப் பொருட்கள் ஆகியவை வேறு காரணங்களுக்காக தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க கண்காணிப்பு தீவிரமாக்கப்படும்.

கடந்த ஆட்சிக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் காவலர் குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டு வந்தன. 1996-ல் ஆண்டு ஒன்றுக்கு

1,500 காவலர் குடியிருப்புகளாகவும், 1997 ஆம் ஆண்டு 2,500 காவலர் குடியிருப்புகளாகவும் உயர்த்தப்பட்டு அவ்வாறு கட்டப்பட்டு வருகின்றன. இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.90 கோடி செலவாகும். இந்த ஆண்டு முதல் காவலர் குடியிருப்புகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.100 கோடி ஒதுக்கப்படும். இதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு 3,000 காவலர் குடியிருப்புகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் காவல் துறைக்கு 624 புதிய வாகனங்கள் 19 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டன. வரும் ஆண்டிற்கு மாத்திரம் 18 கோடியே 72 லட்சம் ரூபாய் செலவில் 434 புதிய வாகனங்கள் காவல் துறைக்காக வாங்கப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் தொலைத் தொடர்புப் பிரிவில் பணிபுரியும் 628 பணியாளர்களுக்கு இதுவரை சீருடை வழங்கப்படவில்லை. இந்த 628 பேருக்கும் இந்த ஆண்டு முதல் சீருடை வழங்கப்படும்.

உணவுப்படி. சட்டம் ஒழுங்கு மற்றும் அவசர காலப் பணிகளில் காவலர்களை ஈடுபடுத்தும்போதும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினையில் மற்ற இடங்களுக்கும், மாவட்டங்களுக்கும் அனுப்பும் சமயத்திலும் அவர்களுக்கு உணவுப்படி வழங்கப்படுகிறது. இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு, 1997-ல் ரூ.16 என்பது ரூ.25ஆகவும், 1998-ல் ரூ.25 என்பது ரூ.35 ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்போது ரூ.35 என்பது ரூ.45-ஆக உயர்த்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முதல் நிலைக் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு, 1997-ல் ரூ.20 என்பது ரூ.30 ஆகவும், 1998-ல் ரூ.30 என்பது ரூ.40-ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்போது ரூ.40 என்பது ரூ.50-ஆக உயர்த்தப்படுகிறது. Sub-Inspector மற்றும் Inspector-களுக்கு 1997-ல் ரூ.30 என்பது ரூ.45-ஆக உயர்த்தப்பட்டது. தற்போது ரூ.45 என்பது ரூ. 55-ஆக உயர்த்தப்படுகிறது. இதன்மூலம் 10,904 இரண்டாம் நிலைக் காவலர்கள், 72,650 முதல் நிலை மற்றும் தலைமைக் காவலர்கள், 8,542 உதவி ஆய்வாளர்கள் பயன் பெறுவார்கள். சுமார் ரூ.1 கோடி கூடுதலாகச் செலவாகும்.

பிற்பகல் 12-50

Risk allowance—இடர்ப் படி. காவல் துறையினர் ஆபத்து நிறைந்த சூழ்நிலைகளில் பணிபுரிகின்றார்கள். அதனால் அவர்களுக்கு

மாதந்தோறும் இடர்ப் படி வழங்கப்பட்டு வருகிறது. காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை 1997-ல் இடர்ப் படி 20 ரூபாய் என்று இருந்தது. 1998-ல் 50 ரூபாயாக உயர்த்தப்பட்டது. தற்போது இந்த இடர்ப் படி 60 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. துணைக் கண்காணிப்பாளர், கூடுதல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு 1997-ல் 30 ரூபாய் என்று இருந்தது 1998-ல் 60 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இது தற்போது 70 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதனால் அரசுக்கு சுமாராக ஒரு கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும். 90 ஆயிரம் காவலர்கள் இதன் மூலம் பயன் பெறுவார்கள்.

காவலர்களுக்கு தற்போது ஆண்டு ஒன்றுக்கு இரண்டு set சீருடைகள் வழங்கப்படுகின்றன. சீருடை தைக்க set ஒன்றுக்கு 75 ரூபாய் வீதம் தையற்கூலி தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதனை set ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் இரண்டு set -ற்கு 200 ரூபாய் இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பற்றி இங்கே பல உறுப்பினர்களும் எடுத்துக் கூறினார்கள். உதவி ஆய்வாளர்களுக்கான அந்தஸ்து இவர்களுக்குத் தரப்பட்டிருந்தாலும், உதவி ஆய்வாளர்களுக்கான ஊதியம் தரப்படவில்லை என்று தெரிவித்தார்கள். இந்தக் குறை களையப்பட்டு சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கும் உதவி ஆய்வாளர்களைப் போலவே ஊதிய விகிதம் வழங்க ஆணை பிறப்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே அறிவித்தவாறு ஆயிரம் பெண் காவலர்கள் மற்றும் நான்காயிரம் ஆண் காவலர்கள் தேர்ந்தெடுப்பதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இது தவிர இந்த நிதி ஆண்டில் ஓய்வு பெறும் காவலர்களுக்குப் பதிலாக 1,500 காவலர்கள் தேர்வு செய்யப்படவுள்ளார்கள். இதையும் தவிர கடலோரக் காவல் படை, அதி விரைவுப் படை மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஆகிய பணிகளுக்காக மேலும் 2,000 காவலர்கள் இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்கள்.

நடப்பாண்டில் தேர்வு செய்யப்பட்டு வரும் 5,000 காவலர்களோடு இந்த 3,500 காவலர்களும் சேர்ந்து 8,500 காவலர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1996 ஆம் ஆண்டு முதல் 2000 வரை, 4 ஆண்டுகளில் 57 புதிய காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. 36 புறக்காவல் நிலையங்கள் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டன.

புதிய காவல் நிலையங்கள் கோரி 150-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் என்னிடம் தரப்பட்டுள்ளன. இந்த 150 கோரிக்கைகளில் 15 கோரிக்கைகள் மாத்திரமே ஏற்கப்படுகின்றன.

மாவட்டங்களிலே உள்ள காவல் நிலையங்களின் எண்ணிக்கை, அந்தப் பகுதியிலே நடைபெறும் குற்றங்களின் எண்ணிக்கை மற்றும் சட்டம் ஒழுங்கு நிலை ஆகியவற்றை மனதிலே கொண்டு இந்த 15 காவல் நிலையங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:—

1. திருப்பூர்-மங்கலம்
2. மேல வளவு
3. சிவகிரி
4. சங்கரன்கோவில்
5. மகாலிங்கபுரம்
6. வேப்பளங்குரிச்சி
7. தூக்கணாம்பாக்கம்
8. கிருஷ்ணாபுரம்
9. திருமுல்லைவாயில்
10. சாத்தூர் தாலுக்கா காவல் நிலையம்
11. உசிலம்பட்டி தாலுக்கா காவல் நிலையம்
12. பட்டீஸ்வரம்
13. அம்மாபட்டி
14. தென்கரை
15. கிருஷ்ணன்கோவில்

அடுத்து தாமரைக்கனி கையைக் காட்டுகிறார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியும் ஏராளமான கோரிக்கைகள் வந்துள்ளன. அவற்றில் 10 பேருடைய கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றன:—

1. மருதூர்
2. சத்திரப்பட்டி
3. மதுக்கூர்
4. வைத்தீஸ்வரன்கோவில்
5. வைப்பூர்
6. தூசி
7. கடத்தூர்
8. மல்லாங்கிணறு
9. கள்ளிக்குடி
10. நாகையாபுரம்

இங்கே கட்டடம் கட்டுவதற்கான ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியத்தில் நல்ல கருத்துகளைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியத்தை ஏற்குமாறு கேட்டு அமைகின்றேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், Please sit down. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.